நகராட்சி அலுவலகம்,
பெரியகுளம்.
நாள். 27.08.2021.

# மன்றக் கூட்ட அறிவிப்பு

2021ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் நாள். 27.08.2021 பிலவ வருடம் ஆவணி 11ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் கீழ்கண்ட பொருட்கள் பற்றி முடிவு செய்ய மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெற்றது.

1. **பொருள் :–** இந்நகராட்சி ஆணையாளர் திரு.ர.அசோக்குமார் அவர்களின் ஜுலை 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.களண். 468/2020/சி1)
**தீர்மான எண்:** 1140
**தீர்மானம்** : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

2. **பொருள் :–** இந்நகராட்சி பொறியாளர் திருமதி.ந.சண்முகவடிவு அவர்களின் ஜுலை 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.களண். 573/2020/சி1)
**தீர்மான எண்:** 1141
**தீர்மானம்** : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

3. **பொருள் :–** பெரியகுளம் நகராட்சியில் கட்டிட வரைபட வரைவாளர்களாக பதிவு செய்ய கீழ்க்கண்ட 09 நபர்கள் விண்ணப்பித்துள்ளனர். மேற்படி கட்டிடபடவரைவாளர்களின் ஆவணங்கள் ஆய்வு செய்து சரிபார்க்கப்பட்டது. மேற்படி 09 நபர்கள் கட்டிடபடவரைவாளராவதற்கு தகுதியுடையவர்களாக உள்ளதால் இந்நகராட்சியில் கட்டிட வரைவாளர்களாக ஐந்து வருடங்களுக்கு மட்டும் நியமனம் செய்ய Screening Committee-ன் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பெயர் விபரம் | கல்வி தகுதி | அனுபவம் | உரிமம் |
|---|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.ஷேக்அப்துல்லா | DCE | 5 வருடம் | RE-III |
| 2. | திரு.டி.தினேஷ்குமரன் | BE | 3 வருடம் | RE-III |
| 3. | திரு.எம்.கோபால் | BE | 3.5 வருடம் | RE-III |
| 4. | திரு.எம்.ராஜாமுகமது | BE | 17 வருடம் | RE-I |
| 5. | திருபி.ஷேம்சத்தியசீலன் | B.Arch | 3 வருடம் | RA-I |
| 6. | திரு.ஆர்.பிரபாகரன் | BE | 7 வருடம் | RE-II |
| 7. | திரு.எஸ்.விக்னேஷ் | BE | 3 வருடம் | RE-III |
| 8. | திரு.இ.தாழவாணன் | BE | 13 வருடம் | RE-I |
| 9. | திரு.வி.சிவா | BE | 9 வருடம் | RE-II |

**அலுவலக குறிப்பு :-**

மேற்கண்ட கட்டிடபட வரைவாளர்கள் நியமனம் செய்திட Screening Committee யின் மூலம் 18.08.2021 தேதிய கூட்டத்தில் ஒப்புதல் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.705/2007/எப்1)
**தீர்மான எண்:** 1142
**தீர்மானம்** : முன் அனுமதி அனுமதிக்கப்பட்டது.

4. <u>பொருள்:–</u> இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு பயன்பாட்டில் உள்ள TN60H4800 (Jet Roding) வாகனத்தின் தகுதிச்சான்று **13.08.2021** உடன் முடிவடைந்ததால் புதிதாக தகுதிச்சான்று பெறும் பொருட்டு மேற்படி வாகனத்தில் உள்ள தேவையான அனைத்து பழுதுநீக்கப் பணிகளை மேற்கொள்ள வேண்டி உள்ளது. மேற்படி பழுது நீக்கப்பணிகளை வாகனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான டி.வி.சுந்தரம் ஐயங்கார் & சன்ஸ் (பி) லிமிடெட், தேனி நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கும், அதற்கான செலவினத் தொகை ரூ.**90,932/–** மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

1. புதைவடிகால் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட வாகனத்திற்கு பழுது நீக்கப்பணிகள் செய்ய வேலை உத்தரவு வழங்கியதையும் மற்றும் செலவினம் மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மேற்கண்ட வாகனத்திற்கு பழுதுநீக்கப்பபணி மேற்கொண்டதற்கான செலவினத் தொகையினை புதைவடிகால் நிதியிலிருந்து மேற்க்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1141/2021/இ1)

**தீர்மான எண்: 1143**

**தீர்மானம்** : முன் அனுமதி அங்கீகரிக்கப்பட்டது

5. <u>பொருள்:–</u> பெரியகுளம் நகராட்சியில் **2020–2021**ம் ஆண்டு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டத்தின் கீழ் **19** எண்ணம் பணிகளுக்கு ரூ.**284.00** இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை [MC.2] அரசாணை எண்.**40** நாள்.**05.02.2021**ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி மேற்படி திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு **30.06.21**ம் தேதியன்று மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி (இரண்டாம் அழைப்பு) கோரப்பட்டதை மக்கள் செய்தி தொடர்பு அலுவலர், தேனி அவர்கள் மூலமாக மாவட்ட அளவிலான மாலை முரசு நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்காக விளம்பரக் கட்டணத் தொகை ரூ.**17,562/–**யினை மதுரை மாலை முரசு பிரைவேட் லிமிடெட் பெயரில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.கஎண். 831/2020/இ1)

**தீர்மான எண்: 1144**

**தீர்மானம்** : அங்கீகரிக்கப்பட்டது

6. <u>பொருள்:–</u> பெரியகுளம் நகராட்சியில் **2020–2021**ம் ஆண்டு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டத்தின் கீழ் **19** எண்ணம் பணிகளுக்கு ரூ.**284.00** இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை [MC.2] அரசாணை எண்.**40** நாள்.**05.02.2021**ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி மேற்படி திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு இரண்டு எண்ணம் பணிகளுக்கு மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி (மூன்றாம் அழைப்பு) கோரப்பட்டதை மக்கள் செய்தி தொடர்பு அலுவலர், தேனி அவர்கள் மூலமாக மாவட்ட அளவிலான தினமலர் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்காக விளம்பரக் கட்டணத் தொகை ரூ.**12,600/–**யினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.கஎண். 831/2020/இ1)

**தீர்மான எண்: 1145**

**தீர்மானம்** : அங்கீகரிக்கப்பட்டது

7. <u>பொருள்:</u>– பெரியகுளம் நகராட்சியில் 15–வது மத்திய நிதிக் குழு 2020 – 21 பரிந்துரையின் பேரிலான பிணை மான்யத் திட்டத்தின் கீழ் ( Tied Crant ) முதல் மற்றும் இரண்டாம் உத்தேச மானியத்தின் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளான எண்டப்புளி கிராமத்திலுள்ள நகராட்சி உரக்கிடங்கிற்கு சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் வைகை அணை சாலை நகராட்சி மண்புழு உரம் தயாரித்தல் கூடம் மற்றும் வளமீட்பு மையம் ஆகியவைகளுக்கு உட்புறம் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு 9.9.21ம் தேதியன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மக்கள் செய்தி தொடர்பு அலுவலர், தேனி அவர்கள் மூலமாக மாவட்ட அளவிலான கீழ்க்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டமைக்காக விளம்பரக் கட்டணத் தொகை ரூ.37,850/–யினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நாளிதழ் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | மதுரை மணி | 22,579 |
| 2. | தின மணி<br>Express Publications (Madurai) Private Limited | 15,271 |
| | **மொத்தம்** | **37,850** |

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

மேற்கண்ட செலவினத் தொகையினை இத்திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.கஎண். 1894/2020/இ1)
**தீர்மான எண்: 1146**
**தீர்மானம்** : அங்கீகரிக்கப்பட்டது

8. <u>பொருள்:</u>– 2020–2021ம் ஆண்டு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டத்தின் கீழ் ரூ.769.00இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை [MA-3(2)] அரசாணை எண்.01 நாள்.06.01.2021ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி மேற்படி திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு 25.8.21ம் தேதியன்று மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி (இரண்டாம் அழைப்பு) கோரப்பட்டதை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, சென்னை அவர்கள் மூலமாக கீழ்க்கண்டவாறு மாநில அளவிலான தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு Uipras adz நிறுவனத்திற்கு விளம்பரக் கட்டணத் தொகை ரூ.30,076 /– வழங்கவும் மற்றும் மக்கள் செய்தி தொடர்பு அலுவலர், தேனி அவர்கள் மூலமாக மாவட்ட அளவிலான தினசரி நாளிதழில் கீழ்கண்ட விபரப்படி விளம்பரம் செய்யப்பட்டமைக்காக Malar Publications Pvt Ltd., நிறுவனத்திற்கு விளம்பரக் கட்டணத் தொகை ரூ. 11,088/–யினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நாளிதழ் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Uipras adz<br>1. தீக்கதிர் நாளிதழ்<br>2. Times of India நாளிதழ் | 30076 |
| 2. | Malar Publications Pvt Ltd.,<br>1. மாலை மலர் நாளிதழ் | 11088 |
| | **மொத்தம்** | **41,164** |

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.கஎண். 1453/2020/இ1)

**தீர்மான எண்: 1147**
**தீர்மானம்** : அங்கீகரிக்கப்பட்டது

9. **பொருள்:–** பெரியகுளம் நகராட்சி – பொது சுகாதாரப்பிரிவு – இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகனமேடையில் (Gasifire Crematorium) எரியூட்டும் பணி மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள **23.02.2021** அன்று நகராட்சி அலுவலகத்தில், ஆணையாளர் அவர்களின் தலைமையில் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டதில் பின்வரும் விபரப்படியான நிறுவனங்கள் கலந்து கொண்டனர்.
    1. அன்னை டிரஸ்ட், எண்டப்புளி, பெரியகுளம்.
    2. பெரியார் சேவை மையம், பெரியார் சமத்துவ அறக்கட்டளை, போடிநாயக்கனூர்.
    3. மு.கண்ணன் த/பெ காளிதாஸ், பட்டாபுளி தெரு, வடகரை பெரியகுளம்.
    4. பெரியண்ணன் த/பெ வீரணன் பட்டாபுளி தெரு, வடகரை பெரியகுளம்.

மேற்கூறப்பட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களின் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டதில் தற்போது பராமரிப்பு பணி மேற்கொண்டுவரும் பெரியார் சேவை மையம், போடிநாயக்கனூர் நிறுவனம் பராமரிப்பு பணிகள் சரியில்லாத காரணத்தினால், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி3) துறை அரசாணை (நிலை) எண்.228, நாள்.13.11.2008 ஆணையின் பிற்சேர்க்கையில் உள்ள 18 நிபந்தனைகளுக்குட்பட்டு பராமரிக்க தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு நகராட்சியின் மன்ற அனுமதி பெற்று வழங்கலாம் என்றும், குத்தகைக்கு விடக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்கூறப்பட்ட 23.02.2021ம் தேதிய கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொண்ட நான்கு நிறுவனங்களில் அன்னை டிரஸ்ட், எண்டபுளி, பெரியகுளம் அவர்கள் 15 ஆண்டுகளுக்கும் மேலாக ஆம்புலன்ஸ் நிறுவனம் நடத்தி வருவதாலும், அரசு மருத்துவமனைகளில் செவிலியர் கண்காணிப்பாளர் வரை பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது சேவைகள் செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். எனவே மேற்கூறப்பட்ட பணியானது மகத்துவமான சேவை என்பதால் அன்னை டிரஸ்ட், எண்டப்புளி, பெரியகுளம் அவர்களுக்கு பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகனமேடையை பராமரிக்க அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு : –**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1750/2018/எச்1)**

**தீர்மான எண்: 1148**
**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

10. **பொருள்:–** பெரியகுளம் நகராட்சி வார்டு எண்.25 இந்திராபுரித் தெரு மற்றும் வார்டு எண்.30 அம்பேத்கார் நகர் பகுதியில் உள்ள பொதுக்கழிப்பறைகளில் தண்ணீர் வசதிகளிலுள்ள பழுது நீக்கப் பணி செய்தல், வார்டு எண்.10 வரதப்பர் தெருவில் உள்ள கழிப்பறையில் புதைவடிகால் குழாய் பழுது பணி சரி செய்தல் மற்றும் தலைமை குடிநீர் நிலையத்தில் கழிவுநீர் வெளியேறும் குழாய் ஆய்வுத் தொட்டிகளிலுள்ள பழுதுகள் சரி செய்தல் ஆகியவைகளுக்கான மதிப்பீடு ரூ.85000/– பணிக்கு இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண். 1069/2021/இ1 நாள். 28.07.2021ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் விபரம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.25 இந்திராபுரித் தெரு மற்றும் வார்டு எண்.30 அம்பேத்கார் நகர் பகுதிகளில் உள்ள பொதுக்கழிப்பறையில் குடிநீர் பழுதுநீக்கப் பணி செய்தல், வார்டு எண்.10 வரதப்பர் தெருவில் உள்ள கழிப்பறையில் புதைவடிகால் குழாய் பழுது பணி செய்தல் மற்றும் தலைமை குடிநீர் நிலையத்தில் பழுது நீக்கப்பணிகள் செய்தல் | ரூ.0.85 லட்சம் | திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரர் பெரியகுளம் மதிப்பீட்டு விலையை விட 0.12 % குறைவு | திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரர் பெரியகுளம் மதிப்பீட்டு விலையை விட 0.12 % குறைவு |
| 2. | | | ஆகாஷ் கன்சல்டன்சி, ஒப்பந்ததாரர், 2,நேரூஜி சாலை, தேனி மதிப்பீட்டு விலையை விட 1.95 % அதிகம் | |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாகவும், மதிப்பீட்டைவிட 0.12% குறைவு என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, பெரியகுளம் ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

1. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி குடிநீர் மற்றும் புதைவடிகால் பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, பெரியகுளம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் மற்றும் புதைவடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1069/2021/இ1)
**தீர்மான எண்: 1149**
**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

11. <u>பொருள்:</u>– பெரியகுளம் நகராட்சி பகுதி குடிநீர் ஆதாராமான சோத்துப்பாறை அணை நீர்வரத்து பகுதியில் தடுப்புகள் அமைத்தல், தலைமை குடிநீர் நிலையத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தரைமட்டத் தொட்டி, வ.உ.சி. பூங்காவில் உள்ள தரைமட்டத் தொட்டி மற்றும் நகர்ப்பகுதியில் உள்ள நான்கு மேல்நிலை தொட்டிகளை சுத்தம் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.58,000/–க்கு இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண். 1069/2021/இ1 நாள். 28.07.2021ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 25.08.21 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் விபரம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி பகுதி குடிநீர் ஆதாராமான சோத்துப்பாறை அணை நீர்வரத்து பகுதியில் தடுப்புகள் அமைத்தல், தலைமை குடிநீர் நிலையத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தரைமட்டத் தொட்டி, வ.உ.சி. பூங்காவில் உள்ள தரைமட்டத் தொட்டி மற்றும் நகர்ப்பகுதியில் உள்ள நான்கு மேல்நிலை தொட்டிகளை சுத்தம் செய்யும் பணிகள் செய்தல் | ரூ.0.58 லட்சம் | திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரர் பெரியகுளம் ரூ.57,700/– | திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரர் பெரியகுளம் ரூ.57,700/– |
| 2. | | | ஆகாஷ் கன்சல்டன்சி, ஒப்பந்ததாரர், 2,நேரூஜி சாலை, தேனி ரூ.59,300/– | |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாகவும், மதிப்பீட்டை விட குறைவு என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, பெரியகுளம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

1. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்காணும் பணிக்கு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, பெரியகுளம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1069/2021/இ1)

**தீர்மான எண்:** 1150

**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

12. <u>பொருள்:</u>– பெரியகுளம் நகராட்சி தலைமை குடிநீர் நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு பணிக்கு தேவையான ஆலம் விநியோகம் செய்யும் பணிக்கான மதிப்பீடு ரூ.1,40,000/–க்கு இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண். 1069/2021/இ1 நாள். 28.07.2021ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 25.08.21ம் தேதியன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (ஒரு டன்னுக்கு) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | 2021–2022ம் ஆண்டிற்கு இந்நகராட்சி தலைமை குடிநீர் நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு பணிக்கு தேவையான ஆலம் விநியோகம் செய்யும் பணிகள் செய்தல் | ரூ.1.40 இலட்சம் | திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரர் பெரியகுளம் | ரூ. 13,980 /– |
| | | | ஆகாஷ் கன்சல்டன்சி, ஒப்பந்ததாரர், 2,நேரூஜி சாலை, தேனி | ரூ. 14,500 /– |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாகவும், மதிப்பீட்டை விட குறைவு என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, பெரியகுளம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

1. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்காணும் பணிக்கு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, பெரியகுளம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1069/2021/இ1)

**தீர்மான எண்:** 1151

**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

13. <u>பொருள்:</u>– பெரியகுளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 2020–21ம் ஆண்டு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்ட நிதியின் கீழ் சாலைப்பணிகள், பொதுக் கழிப்பறை கட்டிடப் பணிகள், புதைவடிகால் பணிகள் மற்றும் குடிநீர் பணிகள் போன்ற அடிப்படை வசதிப் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( MC2 ) அரசாணை எண். (D) . 40, நாள். 05.02.2021ன்படி ரூ.284.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்ட பணிக்கு 05.08.2021ம் தேதியன்று மூன்றாம் அழைப்பு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் கடிதத்தில் விலை குறைப்பு அளிக்கப்பட்டதன்படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | இந்நகராட்சி புதிய பேருந்து நிலைய குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல் | ரூ.10.00 இலட்சம் | M/s.விநாயகா கன்ஸ்ட்ரக்சன்ஸ், அரசுபள்ளி பின்புறம், 2வது வீதி தெற்கு, முத்தனம்பட்டி, ஆண்டிபட்டி (வ) | மதிப்பீட்டு விலையை விட 5.60 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.98 % அதிகம் |
| | | | Sunstar Foundation Consultant, கஸ்தூரிபாய் 4வது தெரு, கணபதி, கோயம்புத்தூர் | மதிப்பீட்டு விலையை விட 7.60 % அதிகம் | - |
| 2. | இந்நகராட்சி என்.ஜி.ஓ.காலனி குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல் | ரூ.8.00 இலட்சம் | M/s.விநாயகா கன்ஸ்ட்ரக்சன்ஸ், அரசுபள்ளி பின்புறம், 2வது வீதி தெற்கு, முத்தனம்பட்டி, ஆண்டிபட்டி (வ) | மதிப்பீட்டு விலையை விட 5.20 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.95 % அதிகம் |
| | | | Sunstar Foundation Consultant, கஸ்தூரிபாய் 4வது தெரு, கணபதி, கோயம்புத்தூர் | மதிப்பீட்டு விலையை விட 7.80 % அதிகம் | - |
| 3. | வ.உ.சி. பூங்கா குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தில் உள்ள பம்ப் அறை மற்றும் இதர உள்கட்டமைப்புகளை பழுது பார்த்து மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.10.00 இலட்சம் | திரு.T.ரமேஷ், 10, ரத்தினா நகர், தென்றல் நகர், கஸ்தூரி ரெங்கராஜா பின்புறம், தேனி | மதிப்பீட்டு விலையை விட 5.25 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.97 % அதிகம் |
| | | | திருமதி.S.சிட்டு, 7, ஹைஸ்கூல் தெரு, அல்லிநகரம், தேனி | மதிப்பீட்டு விலையை விட 7.40 % அதிகம் | - |

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் கடிதத்தில் விலை குறைப்பு அளிக்கப்பட்டதன்படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|---|
| 4. | புதைவடிகால் பம்பிங் நிலையத்தில் உள்ள உள்கட்டமைப்புகளை பழுது பார்த்து மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.10.00 இலட்சம் | திருமதி.S.சிட்டு, 7, ஹைஸ்கூல் தெரு, அல்லிநகரம்,தேனி | மதிப்பீட்டு விலையை விட 5.40 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.97 % அதிகம் |
| | | | திரு.T.ரமேஷ், 10, ரத்தினா நகர், தென்றல் நகர், கஸ்தூரி ரெங்கராஜா பின்புறம், தேனி | மதிப்பீட்டு விலையை விட 6.60 % அதிகம் | - |
| 5. | எரிவாயு தகன கட்டிடம் மற்றும் இதர உள் கட்டமைப்புகளை பழுது பார்த்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.5.00 இலட்சம் | திருமதி.S.சிட்டு, 7, ஹைஸ்கூல் தெரு, அல்லிநகரம்,தேனி | மதிப்பீட்டு விலையை விட 5.30 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.96 % அதிகம் |
| | | | திரு.T.ரமேஷ், 10, ரத்தினா நகர், தென்றல் நகர், கஸ்தூரி ரெங்கராஜா பின்புறம், தேனி | மதிப்பீட்டு விலையை விட 6.50 % அதிகம் | - |

மேற்காணும் ஐந்து எண்ணம் பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதினால், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு விலை குறைப்பு செய்திட, இந்நகராட்சி மூலம் 19.08.2021ம் தேதிய கடிதங்களின் மூலம் கோரப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களது விலை குறைப்பு கடிதங்கள் அளித்ததன்படி, ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பு கலன் எண்.6ல் குறிப்பிட்டுள்ளபடி மதிப்பீட்டை விட அதிகம் என்ற விலை விகிதத்தில் உள்ளவை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :-**

மேற்கண்ட ஐந்து எண்ணம் பணிகளுக்கு மூன்றாம் அழைப்பில் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு விலை குறைப்பு செய்து தர கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர்களது விலை குறைப்பு கடிதங்களின்படி, ஒப்பந்தப்புள்ளி மதிப்பு கலம் எண். 6ல் தெரிவித்துள்ளபடி மதிப்பீட்டை விட அதிகம் என்ற விலை விகிதத்தில் உள்ளது. இப்பணிகளுக்கான மதிப்பீடுகள் 2020–2021 அரசு தரப்படுத்தப்பட்ட பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய துறைகளின் விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளதாலும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்ததாரர்களது ஒப்பந்தப்புள்ளி மதிப்பு தொழில் நுட்ப அனுமதி பெற்ற மதிப்பீட்டு தொகைக்குள் உள்ளதாலும், மூன்றாவது அழைப்பில் வரப்பெற்றுள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதால் காலதாமதம் ஏற்படும் என்பதாலும், மேற்படி பெறப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.

(ந.கஎண். 831/2020/இ1)

**தீர்மான எண்: 1152**

**தீர்மானம்** : குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் அங்கீகரிக்கப்பட்டது.

14. <u>பொருள்:–</u> பெரியகுளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 2020–21ம் ஆண்டு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்ட நிதியின் கீழ் சாலைப்பணிகள், பொதுக் கழிப்பறை கட்டிடப் பணிகள், புதைவடிகால் பணிகள் மற்றும் குடிநீர் பணிகள் போன்ற அடிப்படை வசதிப் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( MC2 ) அரசாணை எண். (D) . 40, நாள். 05.02.2021ன்படி ரூ.284.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்ட பணிகளுக்கு இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண். 831/2020/இ1 நாள். 05.07.2021ன்படி 05.08.2021ம் தேதியன்று மறு ஒப்பந்தப்புள்ளிகள் (மூன்றாம் அழைப்பு) கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் தொழில் நுட்ப உறை திறப்பு மேற்கொள்ளப்பட்டதில் தகுதியானவையாக இருந்தது. அதனடிப்படையில் 19.08.2021ம் தேதியன்று விலை விபர உறைகள் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் கடிதத்தில் விலை குறைப்பு அளிக்கப்பட்டதன்படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | இந்நகராட்சி வைகை அணை சாலையில் உள்ள உரக்கிடங்கிற்கு சுற்றுச்சுவர் கட்டுதல் | ரூ.48.00 இலட்சம் | M/s.விநாயகா கன்ஸ்ட்ரக்சன்ஸ், அரசுபள்ளி பின்புறம், 2வது வீதி தெற்கு, முத்தனம்பட்டி, ஆண்டிபட்டி (வ) | மதிப்பீட்டு விலையை விட 4.95 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.91 % அதிகம் |
| | | | Sunstar Foundation Consultant, கஸ்தூரிபாய் 4வது தெரு, கணபதி, கோயம்புத்தூர் | மதிப்பீட்டு விலையை விட 6.26 % அதிகம் | - |

மேற்காணும் பணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதினால், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.விநாயகா கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரரை விலை குறைப்பு செய்திட, இந்நகராட்சி 25.08.2021ம் தேதிய கடிதத்தின் மூலம் கோரப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s.விநாயகா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரரின் 27.08.2021 தேதிய 4.91 % விலை குறைப்பு கடிதம் அளித்ததன்படி, ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பு மதிப்பீட்டை விட 4.91% அதிகம் என்ற விலை விகிதத்தில் உள்ளதை ஏற்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

__அலுவலக குறிப்பு :–__

மேற்காணும் பணிக்கு மூன்றாம் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டை விட **4.95 %** அதிகம் என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் M/s.விநாயகா கன்ஸ்ட்ரக்சன்ஸ்–ன் **27.08.2021** தேதிய விலை குறைப்பு கடிதம்படி **4.91%** அதிகம் என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி உள்ளது. இந்த ஒப்பந்தப்புள்ளி மூன்றாம் மறு ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்றுள்ளதாலும், இப்பணிக்கான மதிப்பீடுகள் **2020–2021** அரசு தரப்படுத்தப்பட்ட பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய துறைகளின் விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளதாலும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளி மதிப்பு தொழில் நுட்ப அனுமதி பெற்ற மதிப்பீட்டு தொகைக்குள் உள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதால் காலதாமதம் ஏற்படும் என்பதாலும், M/s.விநாயகா கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 831/2020/இ1)

**தீர்மான எண்: 1153**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பினை ஏற்று அங்கீகரிக்கப்பட்டது.

**(ஒம்) ப. பாலமுருகன்**
**தனி அலுவலர்**

/ உண்மை நகல் /

**ஆணையாளர்**
**பெரியகுளம் நகராட்சி**